# இராட்சதர்களுடன் போரிடுதல் பற்றி நினைவில் வைக்க வேண்டிய ஏழு சத்தியங்கள்

## (1 சாமுவேல் 17)

*தாவீது மற்றும் இராட்சதன் பற்றிய வரலாற்றை நீங்கள் முதன் முதலாகக் கேள்விப்பட்ட நிகழ்ச்சியும் அது உங்களுக்கு எவ்வளவு உணர்வெழுச்சிமிக்கதாக இருந்தது என்பதும் உங்களுக்கு நினைவு வருகிறதா? ஒருவேளை நீங்கள் இந்த வரலாற்றைப் பலமுறை கேள்விப் பட்டிருக்கலாம், இது தனது வலிவை இழந்த நிலையில் இருக்கலாம். இந்தப் பாடத்தை மதிப்பதற்கு, நீங்கள் இப்பொழுதுதான் முதன் முறையாக இந்த வரலாற்றைக் கேட்பது போல எண்ணி நடவுங்கள். அவ்வாறு உங்களால் செய்ய முடியுமா? மிக நல்லது. நாம் வேதாகமத்தில் உள்ள எழுச்சியூட்டும் சாதனைகளில் ஒன்றைப் படிப்போம்.[1]*

*1 சாமுவேல் 17ம் அதிகாரத்தின் துவக்கத்தில், இஸ்ரவேலர்கள் யுத்தத்தில் இருந்தார்கள்: "பெலிஸ்தர் யுத்தம் பண்ணுகிறதற்குத் தங்கள் சேனைகளைச் சேர்த்து" (வ. 1). பெலிஸ்தர்கள், கடற்கரையோரமாக நகரப் பகுதிகளை அமைப்பதற்காக மத்திய தரைக்கடல் பகுதியின் தீவுகளில் இருந்து பலஸ்தீனத்திற்கு வந்தார்கள். அவர்கள் இஸ்ரவேலர்களின் பக்கத்தில் நிலையான முள்ளாக இருந்தார்கள். இப்பொழுது அவர்கள் இஸ்ரவேலர்களுடன் யுத்தம் செய்ய வந்திருந்தார்கள்.[2]*

*வசனங்கள் 1 முதல் 3 வரை உள்ள பகுதி, காட்சியை அமைக்கின்றது: ராஜாவான சவுலும் அவரது சேனையும் மலையின் மீது அணிவகுத்து நிற்கையில், பெலிஸ்தர்கள் எதிர்ப்புறத்தில் இருந்த வேறொரு மலையின் மீது கூடியிருந்தார்கள். மத்தியில் ஏலா பள்ளத்தாக்கு இருந்தது.[3] ஒவ்வொரு காலைப் பொழுதிலும், இந்தப் படைகள் ஒவ்வொன்றும் தத்தமது படையணிகளை அணிந்து கொண்டு பெரியதாக யுத்தக் கூக்குரலிடுவது வழக்கமாயிருந்தது (17:20, 21). அந்த இரு படைகளும் இழிவான சொற்களை ஒருவர் மீதொருவர் சுழற்றி வீசிக்கொண்டிருந்தார்கள், ஆனால் எவரும் முதலடி எடுத்து வைக்கவில்லை. கடைசியாக, பெலிஸ்தரின் மத்தியில் இருந்து ஒரு இராட்சதன் வந்தான், அவன் பார்ப்பதற்கு*

மகாபெரியவனாய் இருந்தான்: "அப்பொழுது காத் ஊரானாகிய கோலியாத் என்னும் பேருள்ள ஒரு வீரன் பெலிஸ்தரின் பாளையத்திலிருந்து புறப்பட்டு வந்து நடுவே நிற்பான்; அவன் உயரம் ஆறு முழமும் ஒரு ஜாணுமாம்" (17:4). அது ஏறக்குறைய ஒன்பதரை அடி உயரமாயிருந்தது![4] பல மனிதர்களின் உயரத்திற்குத் தகுந்த எடை கோலியாத்திற்கும் இருந்ததாக அனுமானம் செய்தால், அவன் சுமார் 600 முதல் 700 வரையான பவுண்டுகள் எடை கொண்டவனாக இருந்திருப்பான்![5] இது சுமார் 600+ பவுண்டுகள் சதை என்பதாக இருந்தது, இது கொழுப்பு அல்ல. அவன் தன் சிறுவயது முதலாகவே யுத்த வீரனாக இருந்தான் (17:33). அவன் யுத்தத்தில் தேறின நிபுணனாயிருந்தான்.

அவன் ஒரு தலைக்கவசம்[6] உட்பட முழு ஆயுதம் தரித்திருந்தான். அவனது "போர்க்கவசம்"[7] 125 முதல் 150 வரையான பவுண்டுகள் எடையுள்ளதாயிருந்தது![8] அவன் தனது கையில் ஒரு ஈட்டியை ஏந்தியிருந் தான், அத்துடன் கூடுதலாக ஒரு எரி ஈட்டியானது (KJVயில் இது "இலக்கு" என்றுள்ளது) அவனது தோள்களில் தொங்கியது. அந்த ஈட்டியின் தடியானது நெய்யும் தரியின் கட்டையைப் போலவும் மற்றும் அலகு மாத்திரம் 15 முதல் 20 பவுண்டு எடையுள்ளதாயிருந்தது![9] (அவன் அதை யார் மீதும் எறியத் தேவையில்லை; எதிராளியின் தலையில் கொண்டு போய்ப் போட்டாலே போதும்!) அவனது கேடகம் மிகப் பெரியதா யிருந்தது, அதை எடுத்துக் கொண்டு அவனுக்கு முன்னாக நடந்து செல்ல இன்னொரு படைவீரன் தேவையாயிருந்தது.

ஏலாவின் பள்ளதாக்கில் காலூன்றி நின்ற கோலியாத், "உங்கள் பலசாலியான வீரனைக் கீழே அனுப்புங்கள், நாம் இதைச் சண்டையிட்டு முடிவு செய்வோம்" என்று கூக்குரலிட்டான். அவன் பின்வருமாறு அறைகூவல் விடுத்தான்: "அவன் என்னோடே யுத்தம் பண்ணவும் என்னைக் கொல்லவும் சமர்த்தனானால், நாங்கள் உங்களுக்கு வேலைக்காரராயிருப் போம்; நான் அவனை ஜெயித்து அவனைக் கொல்வேனானால், நீங்கள் எங்களுக்கு வேலைக்காரராயிருந்து, எங்களைச் சேவிக்க வேண்டும்" (17:9). இது "தனிநபர் சண்டைக்கான" அறைகூவல் என்று அழைக்கப்பட்டது, இது இராணுவ வழக்குகளைத் தீர்த்து வைப்பதற்குச் சட்டபூர்வமான வழி என்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இது ஒரு மோசமான கருத்தல்ல. அடுத்த முறை இரு நாடுகளுக்கு இடையில் போர் ஒன்று தவிர்க்க முடியாதது என்ற நிலை ஏற்படும் பொழுது, அவ்விரு நாடுகளின் தலைவர்களும் சண்டையிட்டு அதைத் தீர்த்துக் கொண்டு நம்மை சும்மா விட்டு விட்டால் நல்லது தானே!

வசனம் 11, "சவுலும் இஸ்ரவேலர் அனைவரும் அந்தப் பெலிஸ் தனுடைய வார்த்தைகளைக் கேட்டு, கலங்கி மிகவும் பயப்பட்டார்கள்" என்று கூறுகின்றது. வசனம் 16, "அந்தப் பெலிஸ்தன் காலையிலும் மாலையிலும் நாற்பது நாள் வந்துவந்து நிற்பான்" என்று குறிப்பிடுகின்றது. கோலியாத், ஏலாவின் பள்ளத்தாக்கில் ஒரு நாளுக்கு இருமுறையாக நாற்பது நாட்கள் நடந்து வந்து, தனது அறைகூவலை உரைத்துக் கொண்டிருந்தான்; அது மொத்தம் எண்பது முறையாகியிருந்தது. அவன் தனது அறைகூவலை

எண்பத்தோராவது முறையாகக் கூறவிருந்தான்.

ஒன்பதரை அடி உயரம் கொண்ட ஒரு இராட்சதனை எதிர்கொண்டு நிற்பது என்பது பயமிக்கதாக இருந்திருக்கும் ... ஆனால் நாம் யாவரும் நமது வாழ்வில் இராட்சதர்களைக் கொண்டுள்ளோம் - இவை நம் வாழ்வில் பெரிதும் ஆபத்தை விளைவிக்கும் விஷயங்களாக உள்ளன, இவற்றை நாம் எதிர்கொள்ளக் கூடியதாக உள்ளது, நாம் தொடர்ந்து வாழ வேண்டும் என்றால் இந்தப் பிரச்சனைகளை வெற்றி கொள்ள வேண்டியுள்ளது. இது ஒரு சட்டரீதியான யுத்தமாயிருக்கலாம், ஒரு வேலையாட்களுடனான போராட்டமாயிருக்கலாம், ஒரு கெட்ட பழக்கமாயிருக்கலாம், அதிகம் சக்தி வாய்ந்த ஒரு சோதனையாக இருக்கலாம். வலுக்கட்டாயமான உறவுமுறையில் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தமாயிருக்கலாம். இது மக்களை அல்லது மன இறுக்கங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம்; இது கவலைகள் அல்லது பயங்களை விளைவிப்பதில் முடிகின்றன. உங்கள் வாழ்வில் இதுவரை நீங்கள் இவ்விதமான இராட்சதர்களை எதிர் கொண்டிருக்கவில்லையென்றால், ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நீங்கள் எதிர்கொள்வீர்கள் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கின்றேன்!

எனக்கு இராட்சதனாக இருப்பது உங்களுக்கு இராட்சதனாகக் காணப்படாதிருக்கலாம், ஆனால் அது இன்னமும் ஒரு இராட்சதனாகவே உள்ளது. உங்களுக்கு இராட்சதனாக உள்ளது எனக்கு இராட்சதனாகக் காணப்படாமல் இருக்கலாம், ஆனால் இன்னமும் அது உண்மையாகவே உள்ளது. நாம் ஒவ்வொருவரும் அவரவரின் அல்லது அவளவளின் சொந்த, விசேஷித்த சோதனைகளுடன் கூடப் போராடி வருகின்றோம் - இவை நாம் அன்றாட வாழ்வில் சந்திக்கும் இராட்சதர்களாக உள்ளன, இவை உண்மையானவைகளாகவே உள்ளன! மற்ற எவருடைய இராட்சதர் களையும் ஒருக்காலும் இலேசாக நினைத்து விடாதீர்கள்.

நாம் யாவரும் நமது இராட்சதர்களை, நமது அறிவெல்லையைப் பெரிதும் அச்சுறுத்துகின்ற அறைகூவல்களை, நமது முழங்கால்களைப் பலவீனமடையச் செய்கின்ற பிரச்சனைகளை எதிர்கொள்ளுகின்றோம். கேள்வி என்னவென்றால், வாழ்வின் இந்த கோலியாத்துக்களை நாம் எவ்வாறு தோல்வியடையச் செய்ய இயலும்? 1 சாமுவேல் 17ல் நாம், இராட்சதர்களுடன் போராடுதல் பற்றி நினைவில் வைக்க வேண்டிய ஏழு உண்மைகளைக் கண்டறிகின்றோம், இவைகள் நாம் வெற்றியுள்ளவர் களாய் ஆவதற்கு நமக்கு உதவ முடியும்.

## 1. இராட்சதர்களை நீங்கள் எதிர்பாராமல் இருக்கும் பொழுது அவர்கள் தோன்றுகின்றார்கள் (17:12-15, 17-23)

தாவீது பெத்லெகேமில் தம் இல்லத்தில் இருக்கையில், அவரது மூத்த சகோதரர்கள் மூவரும் இஸ்ரவேலுடைய இராணுவத்தில் இருந்தார்கள்.

*அவர்கள் பெலிஸ்தருக்கெதிராக யுத்தம் செய்வதற்காக சவுலுடன் சென்றிருந்தார்கள். மூத்த மகன்கள் யுத்தத்திற்குச் செல்லுவதும், இளையவர்கள் இல்லத்தில் இருந்து வேலை பார்ப்பதும் வழக்கமாயிருந்தது. தாவீது, குடும்பத்தின் குழந்தையாக - பத்துப் பேரில் எல்லாருக்கும் இளைய வராக இருந்தார். அவர் அநேகமாக இன்னும் தம் இளம் பிராயத்தில் இருந்திருப்பார், அவருக்கு இருபது வயது கூட ஆகியிருக்காது.[10] அவரது நேரத்தில் பெரும்பகுதி ஆடுமேய்க்கும் நிலத்திலேயே செலவிடப்பட்டது. அவர் அவ்வப்போது ராஜாவுக்குச் சுரமண்டலம் வாசிப்பதற்காகச் சவுலின் அரண்மனைக்குச் சென்றார் (17:15; இ.வ. 1 சாமு. 16:23), ஆனால் ஆடுகளை மேய்த்தல் என்பதே அவரது அன்றாட வாழ்வாயிருந்தது.*

*ஒரு நாள், ஈசாயி தாவீதிடம், "இப்பொழுது உன் சகோதரர்கள் சென்று நாற்பது நாட்கள் ஆகிவிட்டது, அவர்களுக்கு என்னவாயிற்று என்று எனக்குத் தெரியவில்லை. நீ சென்று அவர்களை விசாரித்து வரவேண்டும் என்று நான் விரும்புகின்றேன். இந்த உணவுப்பொருட்களை எடுத்துக் கொள்; அவர்களைப் பற்றிய செய்தியோடு திரும்பி வா" என்று கூறினார். பெத்லெகேம் பத்து முதல் பதினைந்து மைல்கள் தூரத்தில்தான் இருந்தது, ஆனால் ஒரு மாதத்திற்கும் மேலாக, அந்த மூன்று சகோதரர்கள் பற்றி குடும்பத்திற்கு எந்த ஒரு தகவலும் இல்லை. "அவர்களைப் பற்றிய செய்தி"* (NKJV) *என்பது "அவர்களிடத்தில் அடையாளம்" (17:18) என்ற தொடக்க அர்த்தம் கொண்டதாக உள்ளது (*KJV*யில் காணவும்; தமிழிலும் இவ்வாறு தான் உள்ளது). இது தொட்டறியக்கூடிய அல்லது தெளிவாய்த் தெரியக்கூடிய சிலவற்றைக் குறிப்பிடலாம். அவர்கள் நன்றாயிருக்கின்றார்கள் என்பதற்கான ஆதாரத்தைத் தாவீது எடுத்துக் கொண்டு திரும்ப வேண்டியதாயிருந்தது. "தாவீது அதிகாலையில் எழுந்து, ஆடுகளைக் காவலாளி வசமாய் விட்டு, ஈசாய் தனக்குக் கற்பித்தபடியே எடுத்துக் கொண்டுபோய், ..." (17:20).*

*தாவீது ஏலா பள்ளத்தாக்கை நோக்கி முன்சென்ற பொழுது, இராட்சதனை எதிர்த்துப் போராடுதல் என்பது அவர்தம் சிந்தைக்கு மிகவும் தூரமான விஷயமாயிருந்தது என்று நான் உறுதியாய்க் கூறமுடியும். மற்ற எந்த நாளையும் போலவே அன்றும் பொழுது விடிந்திருந்தது. தாவீது உணர்வெழுச்சியுடன் இருந்தார் என்பதில் ஐயமில்லை - அவர் தம் சகோதரர்களைக் காணச் சென்று கொண்டிருந்தார் மற்றும் அவர் யுத்தத்தைக் காண்பார் - ஆனால் அங்கு (அவருக்கு) முன்பாக என்ன இருந்தது என்பது பற்றிய முன் சிந்தனையோ, இராட்சதன் ஒருவனைச் சந்திக்கும் எண்ணமோ அவரிடம் இல்லை.*

*உங்கள் வாழ்வில் இராட்சதர்கள் தோன்றும் நாள், மற்ற எந்த நாளையும் போலவே தொடங்குகிறது. நீங்கள் விழித்தெழுகின்றீர்கள். உங்கள் வழக்கமான பணிகளைச் செய்கின்றீர்கள். அது ஒரு நல்ல நாளாயிருக்கலாம் அல்லது அது அவ்வளவு நல்ல நாளாயிராமற் போகலாம், ஆனால் அது உங்கள் வாழ்வின் ஆயிரக்கணக்கான நாட்களில் ஒன்றைப் போன்றதாகவே உள்ளது. பிறகு தபாலில் ஒரு கடிதம் வருகிறது ... அல்லது ஒரு தந்தி வருகிறது ... அல்லது தொலைபேசி மணியடிக்கிறது ... அல்லது*

யாரேனும் ஒருவர் வந்து நிற்கிறார். ஒருவேளை நீங்கள் உங்களுக்கு வேலையளிப்பவரின் அலுவலகத்திற்குள் வரும்படி அழைக்கப்பட்டிருக் கலாம் ... அல்லது உங்களை எப்பொழுதும் தொந்தரவு செய்கிற ஆனால் அவ்வளவு முக்கியமற்ற ஒரு உடல்நலப் பிரச்சனை குறித்து சிகிச்சைக்காக மருத்துவரைக் காண நினைத்து அங்கு சென்றிருக்கலாம் ... அல்லது உங்கள் துணைவர்/துணைவி, ‘‘நாம் சிலவற்றைப் பேச வேண்டும்’’ என்று கூறுகின்றார். திடீரென்று இராட்சதன் அச்சுறுத்துகின்றான்.

தாவீது ஏலா பள்ளத்தாக்கிற்குச் சென்று சேர்ந்த பொழுது, அவர் உணவுப் பொருட்களை, இரஸ்துக்களைக் காக்கிறவரிடம் விட்டுவிட்டு, தமது சகோதர்கள் எப்படியிருக்கிறார்கள் என்று காணச் சென்றார். அவர்களிடத்தில் அவர் பேசிக் கொண்டிருக்கையில், ‘‘இதோ, காத் ஊரானாகிய கோலியாத் என்னும் பேருள்ள அந்தப் பெலிஸ்த வீரன் பெலிஸ்தரின் சேனைகளிலிருந்து எழும்பி வந்து நின்று, முன் சொன்ன வார்த்தைகளையே சொன்னான்” (17:23). இந்த வார்த்தைகள் வசனம் 10ல் காணப்படுகின்றன: “நான் இன்றைய தினம் இஸ்ரவேலுடைய சேனைகளை நிந்தித்தேன்; நாம் ஒருவரோடு ஒருவர் யுத்தம் பண்ண ஒருவனை விடுங்கள்.” கோலியாத்தின் குரலில் இருந்த பழிச் சொல்லைக் கவனியுங்கள்: ‘‘நான் இந்த இடத்தில் வந்து நின்று இன்றுடன் நாற்பது நாட்கள் ஆகிவிட்டது! இது நான் அறைகூவல் விடுகிற எண்பத்தோராவது தடவையாக உள்ளது! இஸ்ரவேல் முழுவதிலும் என்னை எதிர்கொள்ளும் தைரியம் எவனுக்கும் இல்லையா?”

வசனம் 23, ‘‘அதை [கோலியாத்தின் வார்த்தைகளை] த் தாவீது கேட்டான்” என்று குறிப்பிடுகிறது. அவர் தமது வாழ்வில் ஒரு இராட்சதன் வந்திருந்ததைப் புறக்கணிக்க இயலாதவராயிருந்தார். இதைக் குறித்துக் கொள்ளுங்கள்: விரைவாகவோ அல்லது தாமதமாகவோ நீங்கள் உங்கள் இராட்சதனைச் சந்திப்பீர்கள்.

## 2. நீங்கள் இராட்சதனை பயத்துடனோ அல்லது விசுவாசத்துடனோ எதிர்கொள்ள முடியும் (17:24-27)

நமது வேதபாடப் பகுதி, படைவீரர்களின் பயத்தையும் தாவீதின் விசுவாசத்தையும் எதிர்மறையாக ஒப்பிடுகின்றது. வசனம் 11, “சவுலும் இஸ்ரவேலர் அனைவரும் அந்தப் பெலிஸ்தனுடைய வார்த்தைகளைக் கேட்டு, கலங்கி மிகவும் பயமடைந்தார்கள்” என்று குறிப்பிடுகிறது. வசனம் 24, “இஸ்ரவேலர் எல்லாரும் அந்த மனுஷனைக் காணும்போது மிகவும் பயப்பட்டு, அவன் முகத்துக்கு விலகி ஓடிப் போவார்கள்” என்று கூறுகிறது.

தாவீது தம் சகோதரர்களிடம் பேசிக் கொண்டிருக்கையில், அந்த இராட்சதன் வெளியே வந்து, தனது அறைகூவலைச் சுழற்றி எறிந்தான். தாவீதினால் தமது காதுகளை நம்ப இயலவில்லை! ‘‘நீங்கள் அந்தப் பெலிஸ்தன் சொன்னதைக் கேட்டீர்களா?’’ எவரொருவரும் பதில்

*அளிக்கவில்லை. தாவீது சுற்றிலும் பார்த்தார் - அவர் மாத்திரம் தனியே இருந்தார். மற்ற ஒவ்வொருவரும் அவருக்குப் பின்னால் ஐம்பதடி தள்ளி, பாதுகாப்பான இடத்தில் நின்றார்கள்! "இஸ்ரவேலர் எல்லாரும் அந்த மனுஷனைக் காணும்போது மிகவும் பயப்பட்டு, அவன் முகத்துக்கு விலகி ஓடிப்போவார்கள்."*

*படையணியினர் அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்த இடத்திற்குத் தாவீது சென்ற பொழுது, படைவீரர்கள் அந்தச் சூழ்நிலையைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த இராட்சதனை எதிர்த்துப் போரிடுவதற்கு எவரரொருவரும் முன்வராதபடியினால் சவுல், "பானையை இனிப்பாக்கியிருந்தார்." அவர், "இவனைக் கொல்லுகிறவன் எவனோ, அவனை நான் மிகவும் செல்வந்தனாக்குவேன். அவனுக்கு என் மகளை மனைவியாகத் தருவேன்[11] மற்றும் அவனது தகப்பன் வீட்டிற்குச் சர்வமானியம் கொடுப்பேன் - அதாவது அவர்கள் வரியிலிருந்தும் பொது சேவையிலிருந்தும் விலக்குப் பெறுவார்கள்" என்று கூறியிருந்தார்.*

*பின்வரும் கேள்வியைக் கேட்க நாம் சற்று நின்று நிதானிப்போம்: இஸ்ரவேலின் பக்கம் அணிவகுத்து நின்றிருந்த படைவீரர்கள் எல்லாரிலும், இராட்சதனை எதிர்த்துப் போரிடத் தர்க்கரீதியாகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்? அங்கிருந்த எல்லாருக்கும் தலைவராகவும் மற்ற ஒவ்வொருவரையும் விட உயரமானவராகவும் - ஏறக்குறைய அந்த இராட்சதனுக்குச் சமமான உயரத்துடனும் இருந்தது யார்? சவுலே தாம் (1 சாமு. 10:23) - ஆனால் சவுல் பயப்பட்டார் (1 சாமு. 17:11), எனவே அவர் தமது மனிதர்களின் முன்பாக இந்த பரிசுகளை ஊசலாட விட்டார்.*

*கவர்ச்சிகரமான இந்த வெகுமதிகள் தாவீதின் தலைக்கு நேராக ஒன்று குவிக்கப்பட்டன என்று நான் நம்புகின்றேன். தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட்டபடியினால் தாவீது கலக்கம் அடைந்தார். தாவீது அந்த வெகுமதிகளில் ஆர்வம் காண்பிக்கவில்லை; மாறாக, அவர் தமது தேவனைக் கனப் படுத்துதல் பற்றி அக்கறை கொண்டிருந்தார். வசனம் 26ன் இறுதியில் தாவீதின் வார்த்தைகளைக் கவனியுங்கள்: "... ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம்?"*

*தாவீதின் இருதயம் நம் யாவருக்கும் தேவைப்படுகின்றது! ஒவ்வொரு நாளும் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுவதை நாம் கேட்கின்றோம் - அது நமக்குப் பழக்கமாகி விட்டது. நாம் (இருதயம்) கடினப்பட்டவர்களாகி, அதைப் பற்றி ஒன்றும் நினைக்காமல் சென்று விடுகின்றோம். தாவீது கோபமுற்றார்! அவர்கள் ஜீவனுள்ள தேவனை நிந்தித்துக் கொண்டிருந்தார்கள். "அதைக் குறித்து யாரேனும் ஒருவர் ஏதேனும் ஒன்றைச் செய்யாமல் இருக்கிறது ஏன்?!"*

*நமது வாழ்வில் இராட்சதர்கள் வருகையில், நாம் பயப்படக் கூடும், அல்லது அவர்களை நாம் தேவன் மீதான விசுவாசத்துடன் சந்திக்கக் கூடும். நாம் அவர்களால் மேற்கொள்ளப்படக் கூடும், அல்லது அவர்களை நாம், தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் என்ற வகையில் காண முடியும்.*

## *3. உங்களை உற்சாகமிழக்கச் செய்வதற்கு யாரேனும் ஒருவர் எப்பொழுதும் தயாராக இருப்பார் (17:28-33)*

*தனிநபரின் வாழ்வில் பிரச்சனைகள் இருக்கும் பொழுது, சுற்றிலும் இருப்பவர்கள் ஆதரவாக, உதவி செய்பவர்களாக, மற்றும் பலப்படுத்து பவர்களாக இருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கலாம் - ஆனால் விஷயம் அவ்வாறு இருப்பதில்லை. அதற்குப் பதிலாக, "நீங்கள் இதைச் செய்ய இயலாது. இதற்குத் தேவையானது உங்களிடம் இல்லை. இதை நீங்கள் செய்யாமல் விடுவது நன்று" என்று கூறுவதற்கு எப்பொழுதுமே யாரேனும் ஒருவர் தயாராக இருப்பார்.*

*இராட்சதனுக்கு எதிராகப் போரிடுதல் என்ற விஷயத்தில், தாவீதின் தந்தை ஏற்கனவே, "நீ மிகவும் இளையவன்" என்று கூறியிருந்தார். ஈசாய் தமது மூத்த மகன்களை இராணுவத்தில் சேர அனுப்பினார், ஆனால் அவர் தாவீதை அனுப்பவில்லை.*

*இப்பொழுது தாவீதின் சகோதரர் ஒருவர், "நீ மிகவும் பக்குவமற்றவன்" என்று கூறினார்.*

> *அந்த மனுஷரோடே அவன் பேசிக்கொண்டிருக்கிறதை அவன் மூத்த சகோதரனாகிய எலியாப் கேட்டபோது, அவன் தாவீதின்மேல் கோபங்கொண்டு: "நீ இங்கே வந்தது என்ன?[12] வனாந்தரத்திலுள்ள அந்தக் கொஞ்ச ஆடுகளை நீ யார் வசத்தில் விட்டாய்? யுத்தத்தைப் பார்க்க அல்லவா வந்தாய்? உன் துணிகரத்தையும், உன் இருதயத்தின் அகங்காரத்தையும் நான் அறிவேன்" என்றான் (17:28).*

*எலியாப் யார் என்பதை சிந்தையில் கொள்ளுங்கள். சாமுவேல் அடுத்த ராஜாவை அபிஷேகம் செய்ய சாமுவேல் வந்திருந்த போது வீட்டிற்குள் கடந்து வந்த முதலாம் நபராக இவர் இருந்தார். சாமுவேல், "இவன் தானாக்கும்!" என்று நினைத்திருந்தார், ஆனால் தேவன் சாமுவேலின் தோள்களின் மீது தமது கரத்தை வைத்து, "இவனல்ல, மனுஷன் பார்க்கிற படி நான் பாரேன்; நான் இருதயத்தைப் பார்க்கிறேன்" (1 சாமு. 16:6, 7). என்று கூறினார். பிறகு எலியாப் அங்கேயே நின்றுகொண்டு, தமது இளைய சகோதரனான தாவீதின்மீது கொம்பிலிருந்து தைலம் வார்க்கப்பட்டதைக் கவனிக்க வேண்டியதாயிற்று. பொறாமை இந்த மனிதரைத் தின்று கொண்டிருந்தது. இவர் தாவீதின் நோக்கங்களை, தாவீதின் வேலையை, மற்றும் தாவீதின் இருதயத்தை அவமதித்தார்.*

*தாவீது தம் சகோதரருடன் சண்டையிடுதல் என்பதே அவரது இயல்பான பதில்செயலாக இருந்திருக்கும். உங்களுக்குச் சகோதரர்களும் சகோதரிகளும் இருக்கின்றார்களா? நீங்கள் அவர்களுடன் எப்பொழுதாவது பிணக்குக் கொண்டிருக்கின்றீர்களா? தாவீது நம்மைப் போலானவராக இருந்திருந்தால், அவர் அநேகமாக எலியாபுடன் கைச் சண்டை யிட்டிருப்பார். இதுவே நாம் இராட்சதர்களை எதிர்கொள்ளும்போது பெரும்பாலும் செயல்படுகின்ற வழிமுறையாக உள்ளது. இராட்சதர்*

களுடன் போரிடுவதற்கு நம் சக்தியைச் செலவிடுவதற்குப் பதிலாக, நாம் மக்களுடன் போரிட்டுக் கொண்டிருக்கிறோம். நாம் மகிழ்வு இல்லாதவர்களாக, ஒருமைப் பண்பு குறைந்தவர்களாக இருக்கின்றோம், எனவே நமது இராட்சதர்களை தோல்வி அடையச் செய்வதற்கு செலவிட்டிருக்கப்பட வேண்டிய சக்தியை நம்மைச் சுற்றியிருப்பவர்களுடன் (போரிடப்) பயன்படுத்துகின்றோம்.

ஆயினும் தாவீது, தமது சகோதரருடன் யுத்தத்தை நீட்டிக்கச் செய்வதில் இழுக்கப்பட்டுவிட மறுத்து விட்டார். அவர், "நீங்கள் ஏன் அவ்வாறு பேசுகின்றீர்கள்? நான் தவறு எதையும் செய்யவில்லையே" (1 சாமு. 17:29) என்று கூறினார். பின்பு அவர் இன்னொருவரின் பக்கமாய்த் திரும்பி பேசத் தொடங்கினார். கீழே உள்ள பள்ளத்தாக்கில் இராட்சதன் இருக்கும் வேளையில் அவர் முகாமினுள் சண்டையிடப் போவதில்லை.[13]

தாவீதின் விசாரிப்புகள் சவுலின் காதிற்கு வந்தன, சவுல் தாவீதுக்கு ஆளனுப்பினார். தாவீது அரசரிடத்தில், "இவனிமித்தம் ஒருவனுடைய இருதயமும் கலங்க வேண்டியதில்லை; உம்முடைய அடியானாகிய நான் போய், இந்தப் பெலிஸ்தனோடே யுத்தம் பண்ணுவேன்" என்று கூறினார் (17:32).

இப்போது சவுல் தாவீதை உற்சாகமிழக்கச் செய்ய முயற்சி செய்தார். அவர், "நீ இந்தப் பெலிஸ்தனோடே எதிர்த்து யுத்தம் பண்ண உன்னால் ஆகாது; நீ இளைஞன், அவனோ தன் சிறுவயது முதல் யுத்த வீரன்" என்று கூறினார் (17:33).[14] "யுத்தத்தைப் பற்றி உனக்கு என்னதான் தெரிந்திருக்க முடியும்? நீ ஆடுகளை கவனித்துக் கொண்டிருக்கிற இளைஞனாயிருக்கிறாய். இதற்கு எதிரிடையாக, இந்த இராட்சதனோ அவன் சிறு பையனாயிருந்ததிலிருந்து இந்த வேளைக்காகத் தன்னைப் பயிற்சியளித்துக் கொண்டிருக்கிறான். இல்லை, நீ கொஞ்சமும் அனுபவமில்லாதவனாயிருக்கிறாய்."

இந்த இளைஞன் கோலியாத்துடன் போரிடுவதில் இவரது ஊக்கத்தை இழக்கச் செய்ய ஒவ்வொருவரும் முயற்சி செய்தார்கள். சற்றுப் பிறகு, அந்த இராட்சதனே, "நீ மிகவும் சிறுவன்! நீ மிகவும் பலவீனம் உள்ளவன்! நீ ஆயுதம் எதுவும் இல்லாதவன்!" என்று கூறினான் (17:42, 43ஐக் காணவும்).

உங்கள் இராட்சதனை நீங்கள் எதிர்கொள்ளும்போது, ஊக்கமிழக்கச் செய்யும் வார்த்தைகளை நீங்கள் கேட்பீர்கள். அவை (தாவீது தம் தந்தையாலும் தம் சகோதரராலும் உற்சாகம் இழக்கப்படச் செய்தது போல) உங்கள் குடும்பத்தில் இருந்து வரலாம். அவை நீங்கள் உங்கள் நண்பர் என்று நினைத்துக் கொண்டிருக்கும் ஒருவரிடமிருந்து வரலாம் (தாவீது இதற்கு முன்பே அவ்வப்போது தமது சுரமண்டலத்தைச் சவுலுக்காக இசைத்திருந்தார் என்பதை நினைவில் வையுங்கள்). அவை உங்களை விரும்பாத ஒருவரி(கோலியாத் போன்றவர்களி)டமிருந்தும் வரலாம். நீங்கள் அதை எண்ணிப் பார்க்க முடியும்.; அவை வரும். அவைகளுக்காக உங்கள் சிந்தையை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள், மக்கள் உங்களிடம் "அதை நீங்கள் செய்ய இயலாது!" என்று கூறினால் ஆச்சரியப்படாதீர்கள்.

# *4. உங்கள் கோலியாத்தை நீங்கள் சந்திக்கும் முன்பாகவே நீங்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும் (17:34-37)*

*நீங்கள், "பிரச்சனை எழும் வரையில் நான் காத்திருப்பேன், பின்பு நான் அதை எதிர்கொள்வேன்'' என்று நினைத்தால், அநேகமாக நீங்கள் கோலியாத் போன்றே உங்கள் முதுகு தரையில் விழும் விதமாக கீழே சாய்ந்து வீழ்ந்து விடுவீர்கள். நீங்கள் உங்கள் கோலியாத்தைச் சந்திப்பதற்கு முன்பாகவே ஆயத்தமாயிருக்க வேண்டும்.*

*கோலியாத்தை எதிர்க்கத் தாவீது தம்மைத்தாமே தயார் செய்து கொண்டிருந்தார், முதலாவது அவர் ஆடுகளை மேய்க்கையில் சிங்கம் கரடி முதலிய மிருகங்களை எதிர்த்துப்போரிட்டதன் மூலம் இதற்குத் தம்மைத் தயார் செய்திருந்தார். சவுல் தாவீதை உற்சாகமிழந்து போகும்படி செய்ய முயற்சித்த போது, தாவீது பின்வருமாறு பதில் அளித்தார்:*

> *உம்முடைய அடியான் என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறபோது, ஒருவிசை ஒரு சிங்கமும், ஒருவிசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக் கொண்டது. நான் அதைத் தொடர்ந்துபோய், அதை அடித்து, அதை அதின் வாய்க்குத் தப்புவித்தேன்; அது என் மேல் பாய்ந்தபோது, நான் அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்றுபோட்டேன். அந்தச் சிங்கத்தையும் அந்தக் கரடியையும் உம்முடைய அடியானாகிய நான் கொன்றேன்; விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தனும் அவைகளில் ஒன்றைப் போல் இருப்பான்; அவன் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்தித்தானே என்றான் (17:34-36).*

*தாவீது யுத்தகளத்தில் சென்று அங்கு கோலியாத்துக்காகத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கவில்லை, ஆனால் முன்பே மேய்ச்சல் நிலத்திலேயே அதைச் செய்தார். அவர் சிங்கத்தையும் கரடியையும் எதிர்த்து நிற்கத் தேவையின்றியிருந்தது. அவர் ஓடிப் போயிருந்தால் ஆடுகளைத் தவிர வேறு யாரும் அதனை அறிந்திருக்க மாட்டார்கள் - அவைகள் யாருக்கும் அதைச் சொல்லப் போவதில்லை. இந்தக் கொடிய மிருகங்களை எதிர்த்து நின்றதற்காக அவர், அபாயமிக்க கடமைக்கென்று ஊக்குவிப்புத் தொகை எதையும் பெறவில்லை. அவர் தமது புகைப்படத்தை பத்து மணிக்கு வெளியாகும் செய்தியில் "இன்றைய நாளின் வெற்றியாளர்'' என்ற தலைப்பில் வெளியிடப் பெறவில்லை. அவர் ஆடுகளிடமிருந்து ஒரு "நன்றி!'' என்ற வார்த்தையைக் கூடப் பெறவில்லை (ஆடுகள் தங்கள் பாராட்டுரைகளில் உலோபித்தனமாயிருந்தன)! சிங்கங்களையும் கரடி களையும் எதிர்த்து நிற்குதல் என்பது மேய்ப்பனின் பணிவிவரணத்தில் ஒரு பாகமாயிருந்தது - மற்றும் தாவீது தமது பணியை நிறைவேற்றினார்.*

*வாழ்வைச் சந்திப்பதற்கான உங்கள் தயாரிப்பு உங்களுக்குள்ளாக இருந்தே வரவேண்டும். உங்கள் வாழ்வில் சிறிய இராட்சதர்களை எதிர்த்து நிற்குதல் மூலம் நீங்கள் பெரிய இராட்சதர்களை எதிர்த்து நிற்க உங்களைத்*

*தயாரித்துக் கொள்கின்றீர்கள். உங்கள் வாழ்வின் சிறிய பிரச்சனைகளைப் புறக்கணிக்காமல், அவற்றை முழுமையாக எதிர்த்து நின்று தேவனுடைய உதவியுடன் அவற்றைக் கையாளுவதால் பெரிய பிரச்சனைகளுக்கு உங்களைத் தயார் செய்து கொள்ளுகின்றீர்கள்.*

*தாவீது, தேவனுடனான தமது உறவைப் பண்படுத்திக் கொள்ளுதல் என்பதே அவர் கோலியாத்தை எதிர்த்து நிற்கத் தமக்குச் செய்து கொண்ட மிக முக்கியமான ஆயத்தமாயிருந்தது. சிங்கத்தையும் கரடியையும் தாம் கொன்று போட்டதை அவர் கூறியபொழுது, யாருக்கு அவர் கனம் கொடுத்தார் என்பதைக் கவனியுங்கள்: "என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார்" (17:37அ). தாவீது தேவன் மீது விசுவாசம் கொண்டிருந்தார்! "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1 யோவா. 5:4).*

*இந்த இளம் வயது வாலிபர், சவுலின் படையில் இருந்த மனிதர்களிடம் இல்லாத ஒரு விசுவாசத்தை எவ்வாறு வளர்த்துக் கொண்டார்? அவர் தமது சகோதரர்களும் சவுலும் தங்களுடைய விசுவாசத்தை வளர்த்துக் கொண்டிருக்கக் கூடிய அதே வழியிலேயே, நாம் ஒவ்வொருவரும் நமது விசுவாசத்தைப் பெருக்கிக் கொள்ளக் கூடிய அதே வழியிலேயே தமது விசுவாசத்தை வளர்த்துக் கொண்டார். அவர் தேவன் மீதும் தேவனுடைய வசனத்தின் மீதும் தியானமாயிருந்தார் (ரோமர் 10:17) - அவருக்கு எல்லா வெற்றிகளையும் தேவன் கொடுத்தார்.*

*நாம் மறக்க வேண்டியவற்றை நினைவில் வைத்துக் கொண்டும், நினைக்க வேண்டியவற்றை மறந்தும் விடுகின்றோம் என்பதே நம் பிரச்சனையாக உள்ளது. நாம் நமது தோல்விகளை நினைவில் வைத்துக் கொள்கின்றோம், தேவன் நமக்களித்துள்ள நமது வெற்றிகளை மறந்து போகின்றோம். C. H. ஸ்பர்ஜன் அவர்கள், "நாம் நமது பயன்களை தூசியிலும் நமது காயங்களை சலவைக்கல்லிலும் எழுதுகின்றோம் ... நாம் ... நமது துன்பங்களை பித்தளைத் தகட்டின் மீது பதிய வைக்கின்றோம், அதே வேளையில், தேவன் நம்மை விடுதலையாக்கிய பதிவுகள் தண்ணீரின் மீது எழுதப்படுகின்றன" என்று குறிப்பிட்டார்.[15] நாம் நமது கடந்த காலத் தோல்விகளின் மீது எண்ணங் கொண்டிருப்பதற்குப் பதிலாக, நமது பிரச்சனைகளைக் கையாள்வதற்குத் தேவன் நமக்கு எவ்வாறு தொடர்ந்து உதவுகின்றார் என்பதை எண்ணிப் பார்த்தோம் என்றால், நம் வாழ்வில் இராட்சதர்கள் அழைக்கப்படாமலேயே உள்நடந்து வரும்போது நாம் ஆயத்தமாயிருப்போம்.*

## *5. உங்களால் இயன்ற அளவு சிறப்பாக ஆயத்தம் செய்து கொண்டு, பின்பு தேவனைச் சார்ந்திருங்கள் (17:37-47)*

*சவுல் பெரிதும் வருத்தம் கொண்டவராயிருந்திருக்க வேண்டும்; இராட்சதனோடு போரிடும் பொறுப்பை அவர் ஒரு இளம் வாலிபனிடம்*

*ஒப்படைத்தமைக்கு என்னால் வேறு எந்தக் காரணத்தையும் நினைத்துப் பார்க்க முடியவில்லை.*[16] *தாவீதிடம் சவுல், "போ, கர்த்தர் உன்னுடனே கூட இருப்பாராக" (17:37ஆ) என்று கூறினார். அரசர், விசுவாசத்தின் மொழியை அறிந்திருந்தும் (1 சாமு. 23:21ஐயும் காணவும்), விசுவாசத்தின் வாழ்வை அறிந்திராதது முரணானதாக உள்ளது அல்லவா? கர்த்தர் தாவீதுடன் இருந்து அவருக்கு வெற்றியைக் கொடுப்பார் என்று சவுல் உண்மையாகவே நம்பியிருந்தாரென்றால், சவுல் தாமே யுத்தகளத்தில் இருந்திருப்பாரே!*

*தாவீதைச் சுற்றியிருந்த எல்லாரும் கொண்டிருந்த நம்பிக்கைக் குறைவுக்கு நேரெதிரான வகையில் தாவீது கொண்டிருந்த நம்பிக்கை நமது மனதில் ஆழப்பதிகின்றது. குறைந்தது, பின்வரும் மூன்று காரணங்களுக்காகத் தாவீது நம்பிக்கையுடையவராயிருந்தார்: முதலாவது, அவர் தம் பயிற்சியினிமித்தமாக*[17] *நம்பிக்கையுடையவராயிருந்தார். இது 17:38, 39 வசனங்களில் தெரிவிக்கப்படுகின்றது.*

*இவ்வசனங்கள், சவுல் தமது ஆயுதங்களையும் உடைகளையும் தாவீதுக்கு உடுத்துவிக்கும் நகைச்சுவையான காட்சியைக் கொண்டுள்ளது. சவுல் தமது சொந்த ஆயுதங்களைத் தாவீது அணிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பியது ஏன் என்பதற்கு உண்மையான காரணம் எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. ஒருவேளை, சவுல் அந்தப் பெருமையில் பங்குபெற விரும்பியிருக்கலாம் (இது சிலர், "அவர் என் துப்பாக்கியைக் கொண்டுதான் கரடியைச் சுட்டார்" என்று கூறுவது போன்றதாகும்). காரணம் என்னவாக இருந்தாலும்,*[18] *தாவீதின் மீது ஆயுதம் அணிவிக்கப்பட்டது - தலைச்சீரா, பட்டயம், பிற ஆயுதங்களும் அணிவிக்கப்பட்டன. பின்பு வசனமானது, "[அவன்] நடந்து பார்த்தான்" (17:39ஆ) என்று கூறுகிறது.*[19] *தாவீதினுடைய அளவு இளைஞனுக்குரியதான 34 அங்குலம் என்றும், சவுலினுடைய அளவு சராசரியான வளர்ந்த மனிதனுக்குரியதான 48 அங்குலம் என்றும் கற்பனை செய்து பாருங்கள்! அவரால் (தாவீதால்) நடக்கக் கூட இயலாது, சண்டை செய்யவே இயலாது! தாவீது அந்த ஆயுத உடைகளைக் களைந்து போட்டுவிட்டு, "நான் இவைகளைப் போட்டுக் கொண்டு போகக் கூடாது, இந்த அப்பியாசம் எனக்கு இல்லை" (17:39ஆ) என்று கூறினார்.*

*வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் "நான் எனக்குத் தெரிந்தவற்றை மட்டும் முயற்சி செய்யப் போகிறேன்" என்று கூறினார். அவர் தம் கடந்த காலத்தில் தமக்கு அப்பியாசப்பட்டிருந்தவைகளான தாம் அறிந்திருந்தவை மற்றும் தம்மால் செய்ய முடிந்தவை மீது நம்பிக்கை கொண்டிருந்தார். அது என்னவாக இருந்தது? அவர் தம்மால் ஒரு கவணைச் சுழற்றி அதிலிருக்கும் கல்லை (குறிபார்த்து) எறிய முடியும் என்பதை அறிந்திருந்தார். அவர் தமது பயிற்சியின் மீது நம்பிக்கை கொண்டிருந்தார்.*

*இது இரண்டாவது கருத்தொன்றை தெரிவிக்கின்றது: தாவீது தமது ஆயுதங்களின் மீது நம்பிக்கை கொண்டிருந்தார். அவர் தம்மிடத்தில் இருந்தவற்றிலேயே அதிகம் வலிமை வாய்ந்த ஆயுதத்தை அப்பொழுது கொண்டிருக்கவில்லை: அவரது தடி,*[20] *இது அவர் சிங்கங்களையும், கரடிகளையும் கொன்று போட உதவிய கனத்த கோலாக இருந்தது (17:35;*

*சங். 23:4ஐயும் காணவும்). இருப்பினும் அவர் தமது கவணைக் கொண்டிருந்தார் (17:40).*

*"கவண்" என்று அழைக்கப்படும் ஒரு கருவியை நீங்கள் அறிந்திருக்கலாம். நான் ஒரு சிறுவனாக இருந்த பொழுது, நாங்கள் இதை கவையாக உள்ள மரக்கிளையைக் கொண்டு செய்வோம். அதில், ரப்பர் குழாயில் இருந்து வெட்டிய இரு நீள் துண்டுகளுடன் இணைக்கப்பட்ட தோல்வார் ஒன்றைக் கட்டிக் கொண்டு அதை வைத்துக் கல்லெறிந்து விளையாடுவோம். அந்தக் கவணைப் பயன்படுத்துவதற்கு அந்த தோல் துண்டில் நீங்கள் ஒரு சிறு கல்லை வைக்க வேண்டும், அந்தத் துண்டின் இருமுனைகளையும் கல்லுடன் சேர்த்துப் பிடித்து இழுத்து, எய்கின்ற பொழுது சுழற்றப்பட்டு, அதன் முனைகள் விடுவிக்கப்படும், அப்போது கல் குறியை அடையும். தாவீது "தன் கையில்" பிடித்திருந்தது இது அல்ல. தாவீது வைத்திருந்த கவண் என்பது, ஒரு சிறு தோல் பையானது இதன் இரண்டு முனைகளிலும் தோல்வாரினால் இணைக்கப்பட்டதாயிருந்தது. இதை உபயோகிக்க, தோல் பையில் ஒரு கல்லை வைத்து, இரு முனைகளின் வாரையும் ஒன்றாகப் பிடித்துக் கொண்டு நன்றாகச் சுழற்றி, ஒரு முனையை மாத்திரம் விட்டுவிட வேண்டும். நான் சிறுவனாக இருந்தபொழுது, பல முறைகள் ஒரு தோல் துண்டையும் கயிறுகளையும் கொண்டு கவண் செய்ய முயற்சித்துள்ளேன். அந்தக் தோல் துண்டினுள் ஒரு சிறு கல்லை வைத்து, என் தலைக்கு மேலாக அதைச் சுற்றி, அதன் ஒரு முனையை விட்டு விடுவேன். கல்லானது வேறு திசையில் பறக்காதிருந்தால் ... தனது இலக்கை நோக்கிப் பறந்து செல்லும். (இந்த கவணைக் கொண்டு) நான் பல பொருட்களை உடைத்து விட்டேன், கடைசியில் என் அம்மா என்னை வெளியேற்றி விட்டார்கள். கண்டு பிடிக்கப்பட்ட கருவிகளிலேயே இது மிக மிக எளிதில் கையாள இயலாததாக இருந்திருக்க வேண்டும்.*

*இருப்பினும், சிலர் இந்தத் திடமற்ற கருவியைக் கொண்டு மாபெரும் நுணுக்கத்தை வளர்த்துக் கொண்டுள்ளனர் என்பது மிகவும் வியப்பக் குரியதாக உள்ளது. நியாயாதிபதி 20:15, 16 வசனங்கள், பென்யமீன் கோத்திரத்தில் இடது கைப்பழக்கம் கொண்டவர்கள் எழுநூறு பேர் இருந்தார்கள் என்று கூறியபின், "அவர்கள் அனைவரும் ஒரு மயிரிழையும் தப்பாதபடிக்குக் கவண் கல் எறிவார்கள்!" என்று கூறுகிறது. இராய் ஆஸ்பர்ன் அவர்கள் ஒருமுறை பலஸ்தீனத்திற்குச் சென்றிருந்தார்.[21] அவர் ஒரு குன்றின் அருகே நிழலில் உட்கார்ந்திருந்த, வெள்ளாடு மேய்க்கும் ஒரு இளைஞனிடம் வந்தார். அவனுடைய வெள்ளாடுகள் நூறு அல்லது அதற்கு அதிகமான கெஜங்கள் தூரத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. அந்தப் பையன் தன் மந்தையை ஒரு கவண் கொண்டு கவனித்துக் கொண்டிருந்தான். ஒரு வெள்ளாடு அலைந்து திரியத் தொடங்கினால், அவன் (தன் கவணைக் கொண்டு) ஒரு கல்லை அதன் முன் எறிந்து, அதைப் பயமுறுத்தி மீண்டும் மந்தையோடு சேர்ந்திருக்கச் செய்வான். அந்த மேய்ப்பனிடம் நடந்து சென்ற இராய், சற்று தூரத்தில் இருந்த அத்தி மரம் ஒன்றை அவனுக்குச் சுட்டி காண்பித்து, அதை அவனால் அடிக்க இயலுமா என்று கேட்டார். அந்தப் பையன் தன் கவணுக்குள் ஒரு கல்லைப் போட்டு, அது கண்களுக்கு*

*மங்கலாகத் தெரியும் வரைக்கு அதை வேக வேகமாகச் சுழற்றினான். பின்பு அவன் அக்கல்லைக் குறியிடத்திற்குப் போக அனுமதித்தான் - அந்தக் கல் அம்மரத்தின் அடிப்பகுதியில் சென்று புதைந்தது.*

*அந்த வகையான திறமையைத் தாவீது வளர்த்துக் கொண்டிருப்பார் என்பது உறுதி. "[அவன்] தன் தடியைக் கையிலே பிடித்துக் கொண்டு, ஆற்றிலிருக்கிற ஐந்து கூழாங்கல்லுகளைத்[22] தெரிந்தெடுத்து, அவைகளை மேய்ப்பருக்குரிய தன்னுடைய அடைப்பப்பையிலே போட்டு" (17:40அ). தாவீது தம் கையில் ஒரு தடியைப் பிடித்துக் கொண்டு - அது ஆயுதம் அல்ல, ஆனால் நடக்கப் பயன்படும் அவரது கைத்தடி - குன்றின் அருகாமையில் நடந்து சென்றார். அவர் பள்ளத்தாக்கின் மத்தியில் இருந்த நீரோடைக்கு வந்தபோது, அவர் ஐந்து கூழாங்கல்லுகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். அவர் தம் கைக்கு அகப்பட்ட முதல் ஐந்து கற்களை எடுத்துக்கொள்ளாமல், அவற்றிலிருந்து தேர்ந்தெடுத்தார் என்பதைக் கவனியுங்கள். அவர் ஒரு கல்லை எடுத்துப் பார்த்து, "இல்லை, இது பயன்படாது" என்றார். அதை அவர் வீசியெறிந்து விட்டார். அவர் இன்னொரு கல்லைப் பொறுக்கினார். ''இது ஒருவேளை பயன்படும்'' இதை அவர் தம்மிடம் வைத்துக் கொள்ளுகையில், இதைப் போன்ற மற்று கற்களுக்காகப் பார்த்தார். அவர் தமக்கு உண்மையிலேயே தேவைப்பட்ட ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து கற்களை மிகவும் கவனமாகத் தேடிப் பொறுக்கி எடுத்தார். அவர் தம்மிடத்தில் மேய்ப்பருக்குரிய சிறு பை ஒன்றை வைத்திருந்தார். அதில் வழக்கமாக அவரது மதிய உணவு இருக்கும், ஆனால் இன்று அதில் அவர் தமது ஐந்து கற்களைப் போட்டார், அவர் இராட்சதனைச் சந்திக்கத் தயாராகி விட்டார்.*

*இருபக்கத்துப் படைகளிலும் இருந்த எல்லாருடைய கண்களும் இந்தச் சிறுவன் மீதிருக்க, இவர் அந்த நீரோடைப் படுகையில்[23] கீழே இருந்து கொண்டு, கற்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தார், இந்தப் போட்டியின் சாதக அம்சங்கள் யார் பக்கம் இருந்ததாக அந்த மக்கள் நினைத்தார்கள் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்க இயலுமா? அவர் தமது ஐந்து கூழாங்கற்களுடன் அந்த இராட்சதனை நோக்கி நடந்து செல்லுகையில், "வெற்றி வாய்ப்பு" யார் பக்கம் இருந்தது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்.*

*தாவீது தமது பயிற்சி மற்றும் தமது கருவிகள் ஆகியவை மீது கொண்டிருந்த நம்பிக்கையினால் மட்டும் முன் செல்லவில்லை. அவர் (தேவன் மீதான) தமது நம்பிக்கையின் அடிப்படையில் தன்னம்பிக்கை உடையவராயிருந்தார். அவர் தமது தேவனைச் சார்ந்திருந்தார்.*

*வசனம் 40 மற்றும் 41 ஆகியவை இந்த இரண்டு போட்டியாளர் களுக்கும் இடையில் இருந்த கூர்மையான ஒப்பீட்டு வேறுபாட்டை எடுத்துரைக்கின்றன. "தன் கவணைத் தன் கையிலே பிடித்துக் கொண்டு, அந்தப் பெலிஸ்தனண்டையிலே போனான். பெலிஸ்தன் நடந்து, தாவீதண்டைக்குக் கிட்டிச் சேர்ந்தான், பரிசையைப் பிடிக்கிறவன் அவனுக்கு முன்னாக நடந்தான்." மேற்கிலிருந்து மாபெரும் ஆயுதங்கள் தரித்த ஒரு வலிமையாளன் வந்தான், அவனது பலமிக்க ஈட்டியானது இறகுகள் செருகப்பட்டதாயிருந்தது, அவனது வெண்கலத் தலைச்சீரா சூரிய*

*ஒளிபட்டுப் பிரகாசித்தது. கிழக்கில் இருந்து ஒரு சிறிய, கன்னம் சிவந்த இளைஞன் அங்கியும் செருப்பும் போட்டுக் கொண்டு, வெள்ளாட்டு - முடியினால் ஆன கவண் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தான்.*[24]

*தாவீதைப் பார்த்த பொழுது கோலியாத் அவமானப்படுத்தப் பட்டான்.*

> *பெலிஸ்தன் சுற்றிப்பார்த்து: தாவீதைக் கண்டு, அவன் இளைஞனும், சவுந்தரிய ரூபமான சிவந்த மேனியுள்ளவனுமாயிருந்தபடியினால், அவனை அசட்டை பண்ணினான். பெலிஸ்தன் தாவீதைப் பார்த்து, "நீ தடிகளோடே என்னிடத்தில் வர நான் நாயா?" என்று சொல்லி, அவன் தன் தேவர்களைக்கொண்டு தாவீதைச் சபித்தான் (17:42, 43).*

*கோலியாத்து தன் தேவர்களை - தாகோன், பாகால் மற்றும் பிற தேவர்களை - க் கொண்டு தாவீதைச் சபித்தபொழுது, அவன் ஒரு பெரிய தவறைச் செய்தான். அவன் ஒரு இராணுவ எதிர்நடைக்கையை ஒரு இறையியல் போராட்டமாகத் திருப்பிவிட்டான்! அது "தேவனுக்கு எதிராக தேவர்கள்" என்ற நிலையாகச் சென்று கொண்டிருந்தது.*

*கோலியாத்து தாவீதைப் பயமுறுத்த முயற்சி செய்தான்: "என்னிடத்தில் வா; நான் உன் மாம்சத்தை ஆகாயத்துப் பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன்'' (17:44).*[25] *நாம் எதிர்கொள்ளும் அறைகூவல்களினால் நாம் பயமுறுத்தப்படுகின்றோம், அல்லவா? நமது முழங்கால்கள் ஒன்றுடன் ஒன்று (பயத்தினால்) இடித்துக் கொள்ளுவதை நிறுத்தி விட்டால், நாம் நம் இராட்சதர்களை எதிர்த்து நிற்க முடியும்.*

*பெருக்கம் என்பது (இவ்விடத்தில் உடல் அளவின் பெருக்கம்) என்னிடத்தில் செயல்பட்டிருக்கும். ஒன்பதரை அடி உயரம் கொண்ட ஒரு அரக்கன், என் இறந்த உடலைப் பறவைகளுக்கு இரையாக்கப் போவதாகக் கூறியிருந்தால், நான் அச்சத்தினால் திகில் அடைந்திருப்பேன். இருப்பினும், கோலியாத்தின் அச்சுறுத்தல் தாவீதைப் பயமுறுத்துவதற்குப் பதிலாக, வேதாகமத்தில் காணப்படுகின்ற விசுவாசத்தின் மிக உயர்ந்த வெளிப்பாடுகளில் ஒன்றை வெளிக் கொண்டு வந்தது:*

> *அதற்கு தாவீது: பெலிஸ்தனை நோக்கி: ''நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும் கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன். இன்றைய தினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார்; நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னை விட்டு வாங்கி,*[26] *பெலிஸ்தருடைய பாளையத்தின் பிணங்களை இன்றையதினம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன்; அதனால் இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள். கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் இரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த ஜனக் கூட்டமெல்லாம் அறிந்துகொள்ளும்; யுத்தம் கர்த்தருடையது; அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்றான் (17:45-47).*

*"யுத்தம் கர்த்தருடையதாக உள்ளது."* இந்த வசனப்பகுதியை நீங்கள் புரிந்து கொள்ளாதிருந்தால் நீங்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. தாவீது ஒரு எளிய கொள்கையின்படி வாழ்ந்தார். அவர் ஏதொன்றையும் நிரூபிக்க வேண்டியதோ அல்லது ஏதொன்றையும் இழக்க வேண்டியதோ இல்லை. அவர் யாரேனும் ஒருவரின் மனதில் ஆழ்ந்த கருத்துக்களைப் பதிய வைப்பதற்கு முயற்சி செய்யவில்லை. அவர் தமது தேவனின் சார்பாக மட்டும் நின்று கொண்டிருந்தார். பரலோகத்தில் தேவன் ஒருவர் இருக்கின்றார், வெற்றி அவருக்கே உரியது என்பதை எல்லாரும் அறிய வேண்டும் என்று அவர் (தாவீது) விரும்பினார்.

வாழ்வு கொண்டுவரக் கூடிய அறைகூவல்களுக்கு உங்களை நீங்கள் தயாரித்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்று நான் உங்களுக்கு ஆலோசனை கூறினேன். இருப்பினும் உங்கள் வாழ்வின் ஏதோ ஒரு கட்டத்தில், நீங்கள் ஒரு மூலைக்குத் திரும்பி, உங்கள் பயிற்சி யாவும் குறைவுள்ளதாகக் காணப்படும் அளவுக்கு உங்கள் தளவாடங்கள் எல்லாம் போதுமானவைகளல்லாததாகக் காணும் அளவுக்கு மிகப் பெரிய, மாபெரும் எசை கொண்ட ஒரு இராட்சதனை எதிர்கொள்வீர்கள். அப்பொழுது பின்வருவதை நினைவுகூருதல் இன்றியமையாதது ஆகும்: ''யுத்தம் கர்த்தருடையதாக உள்ளது!'' முடிவில் தன்னம்பிக்கையுள்ள வாழ்வை வாழ்வதற்கு நம்பிக்கையே வழியாக உள்ளது - இது தேவன் மீதான நம்பிக்கையாக உள்ளது. நாம் "விசுவாசமே ஜெயமாக இருக்கிறது"[27] என்று பாடுகின்றோம், தாவீது அதை வாழ்ந்து காண்பித்தார்.

## 6. நீங்கள் ஒரு கோலியாத்தைக் கொண்டிருந்தால், உடனடியாக அவனை எதிர்த்து நில்லுங்கள் (17:48-51)

தாவீது தம் ஐந்து கூழாங்கற்களைப் பொறுக்கிய பின், அவர் சற்றும் தயங்கவில்லை; அவர் கோலியாத்தைச் சந்திக்க ஓடினார்.

> அப்பொழுது அந்தப் பெலிஸ்தன் எழும்பி, தாவீதுக்கு எதிராகக் கிட்டிவருகையில், தாவீது தீவிரமாய் அந்தச் சேனைக்கும் அந்தப் பெலிஸ்தனுக்கும் எதிராக ஓடி, தன் கையை அடைப்பத்திலே போட்டு, அதிலிருந்து ஒரு கல்லை எடுத்து, கவணிலே வைத்துச் சுழற்றி, பெலிஸ்தனுடைய நெற்றியிலே பட எறிந்தான்; அந்தக் கல் அவன் நெற்றியில் பதிந்து போனதினால், அவன் தரையிலே முகங்குப்புற விழுந்தான் (17:48, 49).

தாவீது மேய்ப்பருக்குரிய தமது சிறு அடைப்பப் பையில் கை போட்டு, அதில் இருந்தவற்றில் பெரிய கல் ஒன்றைத் தேடி, அதை வெளியில் எடுத்து, அதைக் கவணில் போட்டு, அந்தக் கவணைத் தம் தலையைச் சுற்றிச் சுழற்றலானார். கவண் முதலில் மெல்லியதாக ஒலி கிளப்பிற்று, பிறகு அது உறுமத் தொடங்கியது. பிறகு - ட்வாங்! - தாவீது கல்லை விடுவித்தார். அது

காற்றில் சீழ்க்கையடித்துப் புறப்பட்டு கோலியாத்தின் நெற்றியில் புதைந்தது. கோலியாத், (துப்பாக்கியினால்) சுடப்பட்டவன் போல விழுந்தான். அந்த இராட்சதன் சத்தத்துடன் தரையை மோதிய பொழுது, பூமி குலுங்கியது.

தாவீதின் வேலை இன்னும் முடியாதிருந்தது. அந்த இராட்சதன் அதிர்வுற்று மட்டும் கிடப்பவனாக இருக்கலாம். தாவீது மீண்டும் ஓடினார் (17:51). அவர் விழுந்து கிடந்த உடலின் அருகில் ஓடினார். அவரிடம் பட்டயம் எதுவும் இல்லை[28] எனவே அவர் கோலியாத்தின் பட்டயத்தை எடுத்துக் கொண்டார். ("உன் தலையை வெட்ட உன் பட்டயத்தை இரவல் கொடுப்பாயா? உனக்கு நன்றி.") பலமான ஒரு "அடி" யுடன் அந்தப் பயங்கரமான பணி நிறைவேற்றப்பட்டது.

நிறைவான வெற்றியானது அளவு அல்லது உடல்ரீதியான பலம் ஆகியவற்றையல்ல, ஆனால் தேவனுடனான நமது உறவைச் சார்ந்ததாகவே உள்ளது என்பதை, இந்த மாபெரும் வெற்றியானது நமக்குப் போதிக்கின்றது. இதை நாம் ஒருக்காலும் மறந்து விடலாகாது! போரிடுவதற்கு ஒரு இராட்சதனை நீங்கள் பெற்றிருக்கும்பொழுது, அந்தப் போரைத் தள்ளி வைத்து விடாதீர்கள் என்றும் இந்த வெற்றி நமக்குப் போதிக்கின்றது. ஒரு அறைகூவலை நீங்கள் தள்ளி வைக்கும் ஒவ்வொரு நாளிலும் அந்த இராட்சதன் உயரத்தில் இன்னொரு மூன்றடி கூட வளர்ந்து விடுவான்! கடந்து செல்லும் நாட்கள் ஒவ்வொன்றிலும், அது கடினமானதாகி விடும், அந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பது மிகவும் கடினமானதாகி விடும். தேவனுடைய உதவியுடன் உங்கள் இராட்சதர்களை எதிர்த்து நில்லுங்கள் - அவர்களை உடனடியாக எதிர்த்து நில்லுங்கள்!

## 7. ஒரு வெற்றி இன்னொரு வெற்றிக்கு ஆயத்தம் செய்கின்றது (17:51-54)

தாவீதின் வாழ்வு முழுவதிலும், ஒரு வெற்றியானது அவரை அடுத்த வெற்றிக்கு ஆயத்தப்படுத்திற்று. சிங்கம் மற்றும் கரடியின் மீதான அவரது வெற்றி, அவரை இந்தக் கணத்திற்கு ஆயத்தப்படுத்தியது. இப்பொழுது இந்த வெற்றியானது அவரை மற்ற வெற்றிகளுக்கு ஆயத்தப்படுத்தியது. முதலாவது, தாவீதின் வெற்றி இஸ்ரவேலின் படைகளுக்கு உதவியது. இதை லின் ஆன்டர்ஸன் அவர்கள் கூறும் விதம் எனக்கு மிகவும் பிடித்துள்ளது: "தாவீதின் செயல் வீரமிக்கதாக மட்டுமின்றி, தொற்றிக் கொள்ளக் கூடியதாகவும் இருந்தது."[29]

தாவீது கோலியாத்தைக் கொன்ற பின் நடந்த காட்சியை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது. அவர் பெலிஸ்தரின் படையை ஏறிட்டு நோக்கினார்; அவர்கள் அங்கு விழிபிதுங்க, வாய்பிளக்க நின்று கொண்டிருந்தார்கள். தாவீது இன்னொரு கல்லை எடுத்து, தனது கையில் போட்டு வீசிக் கொண்டே, "இன்னும் யாராவது இராட்சதர்கள் இருக்கிறீர்களா?[30] என்னிடத்தில் இன்னும் நான்கு கற்கள் எஞ்சியிருக்கின்றன" என்று உரத்துச் சத்தமிட்டார். வசனப் பகுதியானது, "அப்பொழுது தங்கள் வீரன் செத்துப்

போனான் என்று பெலிஸ்தர் கண்டு, ஓடிப்போனார்கள்" (17:51ஆ)[31] என்று கூறுகிறது. முன்பு, மிகவும் பயமடைந்திருந்த இஸ்ரவேலர்கள் இப்பொழுது, "எனக்கு ஒரு இராட்சதனைக் கொடுங்கள், எனக்கும் ஒருவன் தேவை!" என்று கூக்குரலிட்டுக் கொண்டு மலைப்பகுதியில் இருந்து வெள்ளமெனப் புறப்பட்டு இறங்கி வந்தார்கள். "அப்பொழுது இஸ்ரவேலரும் யூதா மனுஷரும் எழும்பி, ஆர்ப்பரித்து ... பெலிஸ்தரைத் துரத்தினார்கள்" (17:52அ). தாவீதின் உதாரணம் அவரது சக இஸ்ரவேலர்களுக்கு ஊக்க மூட்டியது.

தாவீதின் வெற்றியானது (அவரது) பிற்கால யுத்தங்களில் அவரையும் ஊக்கமூட்டுவதாக இருந்தது. வசனம் 54, "தாவீது பெலிஸ்தனுடைய தலையை எடுத்து, அதை எருசலேமுக்குக் கொண்டு வந்தான்; அவன் ஆயுதங்களையோ தன் கூடாரத்திலே வைத்தான்." கோலியாத்தின் தலை எருசலேமிலேயே வைக்கப்பட்டது.[32] (அந்தத் தலையை அவர் ஏன் தம் வீட்டிற்கு எடுத்துச் செல்லவில்லை? அவரது தாய் அதை வீட்டில் வைத்திருக்கும்படி அவரை அனுமதித்திருப்பார்கள் என்று என்னால் கற்பனை செய்ய இயலவில்லை!) ஆயினும் கோலியாத்தின் ஆயுதங்களைத் தாவீது தமது வீட்டிற்கு எடுத்துச் சென்றார்.[33] ஒவ்வொரு இரவும் தாவீது தம் படுக்கைக்குச் செல்லும்பொழுது, அந்த ஆயுதங்களைப் பார்த்து, "தேவன் எனக்கு இந்த வெற்றியைத் தந்தார். யுத்தம் கர்த்தருடையது!" என்று கூறியிருக்கக் கூடும். ஒவ்வொரு காலை வேளையிலும் அவர் கண் விழித்த பொழுது, அவற்றைக் கண்டு, அவர் "தேவன் எனக்கு இந்த வெற்றியைத் தந்தார். யுத்தம் கர்த்தருடையது!" என்று கூறியிருக்கக் கூடும். காலையிலும் மாலையிலும், பகலிலும் இரவிலும் அவர், நீங்கள் தேவனிடம் தரித்திருக்கையில் உங்களுக்கு ஜெயம் உண்டு என்ற நினைவூட்டுதல் ஒன்றைக் கொண்டிருந்தார்.

தேவன் உங்களுக்கு வெற்றியைத் தரும் ஒவ்வொரு வேளையிலும், அந்த அற்புதமான நிகழ்ச்சியின் விவரங்களை உங்கள் இருதயத்தில் செதுக்கிக் கொள்ளுங்கள். ஒரு தனி வெற்றியையாகிலும் நீங்கள் தவற விடுவதைத் தேவன் விரும்புவதில்லை; அவர், "அதை மறக்காதீர்கள்!" என்றே கூறுகின்றார். இதைக் காட்டிலும் வெறெதுவும் உங்களுக்கு எதிர்கால யுத்தத்தில் பெலம் அதிகமாய்த் தராது.

## முடிவுரை

"பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே, பலர் இன்று பிரச்சனைகளுடன் போராடிக் கொண்டிருக்கிறார்கள் - அந்தப் பிரச்சனைகள் சில வேளைகளில் அவர்களை மூழ்கடித்து விடுவதாகக் காணப்படுகிறது. நீர் ஒவ்வொருவரோடும் இருந்து அவர்களைப் பெலப்படுத்த வேண்டுமாய் நாங்கள் ஜெபிக்கிறோம். நாங்கள் ஒவ்வொருவரும், வாழ்வு எங்களுக்குக் கொண்டு வருபவை எதுவாயிருந்தாலும் அவற்றிற்கு எங்களைத் தயார் செய்து கொள்ளவும், கடைசியில் உம்மைச் சார்ந்திருக்கக் கற்றுக் கொள்ளவும் அதன் மூலமாக வெற்றி எங்களுடையதாயிருக்கவும் எங்களுக்கு உதவும். எங்கள் பக்கம் நீர் இருந்தால் இயலாதது என்று எதுவும்

இல்லை என்பதை நாங்கள் கற்றுக்கொள்ள உதவும். ஒவ்வொருவரையும் சிறப்பான வழியில் ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்திலே, ஆமென்."

இராட்சதர்களுடன் போராடுதல் என்பது தனித்துச் செய்ய வேண்டிய வேலையாகக் கூடும். தாவீது யுத்த களத்தினுள் அடியெடுத்து வைத்த பொழுது, சவுலும் அவரது சேனையும் அவருடன் கூட இல்லை. அவருடன் இருந்த தேவனைத் தவிர - அவர் தனியாகவே இருந்தார். இராட்சதர்களை எதிர்த்து நிற்க உங்களுக்குத் தேவன் தேவை!

---

*குறிப்புகள்*

*[1]இந்தப் பிரசங்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள பாடக்கருத்துக்களில் அதிகமானவை பல ஆதாரமூலங்களில் தோன்றியுள்ளன. இதை நான் தொடக்க ஆதாரமூலமாக உரிமைகோர இயலாது. [2]பெலிஸ்தருடனான யுத்தமானது தொடர்ந்து நடைபெற்ற ஒன்றாக இருந்து வந்தது (1 சாமு. 14:52ஐக் காணவும்). சவுல் பெலிஸ்தரை மிக்மாசில் தோல்வி யடையச் செய்து இருபத்தேழு அல்லது அதற்கு அதிகமான ஆண்டுகள் கடந்த பொழுது இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. [3]ஏலா பள்ளத்தாக்கு யூதாவிற்கு வடமேற்கில் இருந்தது. இது பெலிஸ்தரின் சமவெளியில் இருந்து யூதாவின் மலைப்பகுதி நாடுகளுக்கு மேலேறி வருவதற்கான பிரதானமான கடவு வழிகளில் ஒன்றாக இருந்தது. [4]ஒரு முழம் என்பது முழங்கை மடிப்பில் இருந்து நடுவிரலின் நுனி வரையுள்ள நீளம் ஆகும், இது சுமார் பதினெட்டு அங்குலமாகும். "ஜாண்" என்பது ஒரு கையின் அகலமாகும், இது சுமார் ஐந்து அங்குல நீளம் ஆகும். இன்றைய நாட்களின் மிக உயரமான கூடைப்பந்தாட்ட வீரர்கள் ஏழடி உயரத்திற்கும் சற்றே அதிகமானவர் களாக உள்ளனர். இன்றைய நாட்களில் உயிருடன் இருப்பவர்களில் மிக உயரமான மனிதர் எட்டடி உயரத்திற்குச் சற்றே அதிகமானவராக இருக்கின்றார். கோலியாத் மிகமிக உயரமான தனிநபராக இருந்தான்! சமீபத்தில் புதைபொருள் ஆய்வாளர்கள், இவ்வளவு பெரிய எலும்புக் கூடுகளை பெலிஸ்தர்கள் வாழ்ந்திருந்த பகுதியில் தற்செயலாகக் கண்டுபிடித்துள்ளார்கள். [5]அவன் இருநூறு பவுண்டுகளுக்கும் (தொன்னூறு கிலோவுக்கும்) அதிகமான எடையுள்ள ஆயுதங்களைத் தூக்கிச் சென்றான் என்பதை நினைவுபடுத்திக் காணும்பொழுது, இது ஒன்றும் நியாயமற்ற யூகமாயிருப்பதில்லை. [6]அவன் தனது கால்களில் வெண்கலக் கவசத்தையும் கொண்டிருந்தான் (17:6); அவைகள் முன்னங்கால்களுக்குப் பாதுகாப்பாயிருந்தன. [7]தோலினால் ஒரு சிறப்பான மேலுடை செய்யப்பட்டது. பின்பு அந்தத் தோலுடை மீது உலோகத்தகடுகள் செதில்களைப் போல் பதிக்கப்பட்டன. இந்த ஆயுத உடையானது ஏறக்குறைய முழங்கால்கள் வரையிலும் தொங்கிற்று. [8]வெவ்வேறு நாடுகளின் எடை அளவுகள் வேறுபட்டவைகளாயிருப்பதால், ஐயாயிரம் சேக்கல் வெண்கலத்தின் எடை எவ்வளவு என்று எவர் ஒருவரும் மிகச் சரியாகக் கூற முடியாது (17:5). இந்த எடை அதிகபட்சம் 200 பவுண்டுகள் (90 கிலோ) இருக்கலாம் என்று சிலர் மதிப்பிடுகின்றார்கள். [9]இது, அறுநூறு சேக்கல்கள் எடை எவ்வளவு நிறைபெறும் என்பதற்கான யூகமாக உள்ளது (17:7). சிலர், இது இருபத்தைந்து பவுண்டுகள் (சுமார் பதினோரு கிலோ) இருக்கலாம் என்று மதிப்பிட்டுள்ளனர். [10]சில எழுத்தாளர்கள் இவரது வயது முன் இருபதுகளில் இருந்திருக்கும் என்கிறார்கள்.*

*[11]சவுல் (ஏதோ) தமது அழகற்ற மகளைத் தள்ளி விடுவதற்காக முயற்சித்துக் கொண்டிருக்கவில்லை! இது ஒரு சோதனைக்குட்படுத்தும் ஊக்கப் பரிசாக*

இருந்தது. அரசரின் மகளை ஒருவர் திருமணம் செய்து கொண்டால், அவர் அரச குடும்பத்தின் அங்கமாகி விடுகிறார். [12]*The Berkeley Version in Modern English* (Grand Rapids, Mich.: Zondervan, 1960) has "Why have you *really* come?" [13]இதை நாம் சபையில் கற்றுக் கொள்ள வேண்டியதாக உள்ளது. பொல்லாங்கு என்ற அரக்கர்களின் மீது நாம் கவனம் செலுத்த வேண்டிய வேளையில், சில நேரங்களில் நாம் சபைக்குள்ளாகச் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோம்! [14]இந்த அத்தியாயம் 1 சாமுவேல் 16:7ன் சத்தியத்தை விவரிக்கின்றது. [15]C.H. Spurgeon, *The Treasury of the Bible*, vol. 1 (Grand Rapids, Mich.: Zondervan, 1968), 660. [16]தாவீது அடுத்த அரசராக அபிஷேகம் செய்யப்பட்டிருந்ததை சவுல் அறிந்திருந்தார் - அதை அறிந்த நிலையில்தான் அவர் தாவீது கொல்லப்படுவார் என்று நினைத்து, அவரை இராட்சதனுடன் சண்டையிட அனுமதித்தார் - என்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். என்னைப் பொறுத்தமட்டில், அடுத்துத் தொடர்ந்த சவுலின் செயல்கள் இந்த நோக்கத்துடன் சீர் பொருந்தினவைகளாகக் காணப்படுவதில்லை. தாவீது வெற்றி பெற வாய்ப்பில்லை என்று சவுல் நினைத்தாலும், "சரி, சரி சென்று முயற்சித்துப் பார்" என்று கூறுமளவுக்குத் தாவீது விடாப்பிடியுடன் இருந்தார் என்பது இன்னொரு கருத்தாகும். [17]இந்தப் பகுதியில் உள்ள மூன்று "t'' க்கள் (training, tools and trust), லின் ஆண்டர்ஸன் அவர்களின் ''Facing Giants'' (N.p., n.d.), sound cassette - இருந்து எடுத்துக் கையாளப்பட்டுள்ளன. [18]தாவீதினால் யுத்தம் செய்வதற்கு அவசியமான பாதுகாப்பு உடைகளை அணிய முடியாது என்று காண்பித்து, அவரை ஊக்கம் இழக்கச் செய்வதற்காக சவுல் அவர் மீது ஆயுதங்களை அணிவித்தார் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. [19]The KJV says, "He assayed to go." [20]1 சாமுவேல் 17:40ல் உள்ள ''தடி'' என்பது அநேகமாக அவரது கைத்தடியாக, மேய்ப்பனின் கோலாக இருந்திருக்கும் (KJVயில் காண்க).

[21]இந்தக் கதை லின் ஆண்டர்ஸன் அவர்களின் "Facing Giants'' (N.p., n.d.), sound cassette - இருந்து எடுத்து கையாளப்பட்டுள்ளன. [22]இவைகள், தண்ணீரின் உருண்டோடும் செயலால் உருட்டி வடிவாக்கப்பட்ட கற்களாய் இருந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட கற்களை மிகச் சரியாக (இலக்கை நோக்கி) வீச முடியும். [23]இப்பொழுதும் இந்தப்பள்ளத்தாக்கில் ஓடுகின்ற இந்த நீரோடையானது ஆண்டின் பெரும்பகுதியான நாட்களில் வறண்டு கிடக்கின்றது. [24]இதை, ஒரு எடைமிகுந்த குண்டுவெடிப்புக் கருவி ஒரு மிகச் சிறிய குழலைச் சந்திக்க வருதல் போன்றது என்று யாரோ ஒருவர் கருத்துத் தெரிவித்தார். [25]தாவீதின் உடலைப் புதைக்க அனு மதிக்காமல், அதைக் காட்டு மிருகங்கள் உண்ணும்படி, யுத்தகளத்திலேயே விட்டுவிடப் போவதாகக் கோலியாத் பயமுறுத்தினான். [26]இதைச் சில பிரசங்கியார்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்: "நீ தும்முகின்றதை அறியாத வண்ணமாகவே, நான் மிக விரைவாக உன் தலையை வெட்டியெடுத்து விடுவேன்." [27]"கர்த்தரின் கை குறுகவில்லை" என்ற பாடலை இந்தப் பிரசங்கத்திற்கு முன்னர் பாடுதல் நன்று. (விசேஷமாக இப்பாடலில் வருகிற "விசுவாசத்தால் நீதிமான் இன்றும் என்றும் பிழைப்பான்" என்ற வரிகள் பாடப்பட வேண்டும்.) [28]இரும்பு ஆயுதங்களைச் செய்யும் தனி உரிமையை பெலிஸ்தர்கள் தங்களுக்கென்று வைத்துக் கொண்டார்கள் (1 சாமு. 13:19-22ஐக் கவனிக்கவும்). [29]Lynn Anderson, *Finding the Heart to Go On* (San Bernardino, Calif.: Here's Life Publishers, 1991), 44. [30]பெலிஸ்தியாவில் பிற இராட்சதர்களும் இருந்தார்கள் (2 சாமு. 21:15-22). பிற்காலத்தில் இவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள்; இது தாவீதின் பாரம்பரிய உரிமையாயிருந்தது. (இது தொடர்பாக, இன்னொரு நபரால் கொல்லப்பட்ட இன்னொரு இராட்சதனும் கோலியாத் என்று பெயர் பெற்றிருந்தான் என்பதைக் கவனிக்க வேண்டும். 2 சாமு. 21:19ஐக் காணவும்).

*[31]பிலிஸ்தியர்களின் வீரன் விழுந்தபோது, பிலிஸ்தியர்கள் சரணடைந்து இஸ்ரவேலருக்கு அடிமைகளாயிருந்திருக்க வேண்டும். பிலிஸ்தியர்களின் கௌரவம் என்னவாகிறது! [32]தாவீது அரசராகும் வரையிலும் எருசலேமைக் கைப்பற்றாதிருந்தார் என்பதால் (2 சாமு. 5:6-10), கோலியாத்தின் தலையை எருசலேமுக்குக் கொண்டு வருதல் என்ற கூற்றானது அநேகமாக, பல ஆண்டுகளுக்குப் பின் நடந்ததை முன்பே எதிர்பார்த்த வகையிலானதாக உள்ளது. [33]பட்டயமானது ஆசரிப்புக் கூடாரத்தில் வைக்கப்பட்டிருந்ததால் (1 சாமு. 21:8, 9), "தன் கூடாரம்" என்பது தாவீதின் சொந்தக் கூடாரம் அல்ல, அது ஆசரிப்புக் கூடாரமே என்று சிலர் யூகிக்கின்றார்கள். ஒருவேளை தாவீது தொடக்கத்தில் அந்த ஆயுதங்களைத் தமது வீட்டிற்கு எடுத்துச் சென்றிருந்து, பின்பு இஸ்ரவேல் அனைத்தையும் ஊக்கப்படுத்துவதற்காக அவற்றை நன்கொடையாகக் கொடுத்து விடும்படி இணங்க வைக்கப்பட்டிருந்திருக்கலாம். "கூடாரம்" என்ற வார்த்தை சில வேளைகளில் "இல்லம்" என்பதைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டது என்பதைக் கவனிக்கவும் (1 சாமு. 13:2 முதலியன).*